1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**முன்னிலை : திருமதி.S.பொன் மெலிசா B.A., LL.B,**
1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.3/2025 அதன் அ.வ.எண்.95/2023**

M/s.Vish Wind Infrastrukture LLP.
அதன் துணை மேலாளர்
S.அருண் பிரசாத் மூலம் ... மனுதாரர்/ வாதி

-எதிர்-

1) R. ஜெபசம் அலெண்சாண்டர்
2) K.S. சுதீஷ் குமார் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பாக 16.10.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.P.தாமோதரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பேச்சிமுத்து அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.வினோத் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை ரத்து செய்து மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக்கோரி, மனுதாரரால் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 9ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர் தரப்பில், அசல் வழக்கினை முதலில் வாதி நிறுவனத்தின் சார்பாக நடத்தி வந்த S.பாலசுப்பிரமணியன் என்பவர் ஓய்வு பெற்றுவிட்டதாகவும், தற்போது அசல் வழக்கினை நடத்துவதற்கு அதிகாரம் பெற்ற முகவராக மனுதாரரை நியமித்துள்ளதாகவும், அசல் வழக்கானது 24.03.2025ம் தேதியில் விசாரணைக்கு வந்த சமயத்தில், மனுதாரர் வழக்கறிஞர் வைரல் காய்ச்சலினால்

பாதிக்கபட்டிருந்ததால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், எனவே, அசல் வழக்கானது 24.03.2025 ம் தேதியில் மனுதாரரின் வருகையின்மையால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுத்து உத்தரவிட வேண்டுமென கோரி இந்தமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் வைரல் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு சிசிக்சை எடுத்துக் கொண்டதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், அசல் வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும், எதிர்மனுதாரரை கஷ்ட, நஷ்டப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்யதுள்ளார் என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

4) அசல் வழக்கானது, எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கினை முதலில் வாதி நிறுவனத்தின் சார்பாக நடத்தி வந்த S.பாலசுப்பிரமணியன் என்பவர் ஓய்வு பெற்றுவிட்டதாகலும், மனுதாரர் வழக்கறிஞர் வைரல் காய்ச்சலினால் பாதிக்கபட்டிருந்ததால், நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், அதனால் அசல் வழக்கானது 24.03.2025 ம் தேதியில் மனுதாரரின் வருகையின்மையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், எனவே அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுக்க அனுமதி அளித்த உத்தரவிட வேண்டுமென கட்சி செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரின் வழக்கறிஞர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டதை பொறுத்த எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரருக்கு போதிய வாய்ப்புகள் வழங்கியும் மனுதாரர் அசல் வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகததால் அசல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும் கட்சி

செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட ஒரு மாத காலத்திற்குள்ளாகவே மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரர் அசல் வழக்கினை நடத்துவதற்கு தயாராக உள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, அசல் வழக்கானது எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு அவரது தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யவும், வழக்கின் பெருக்கத்தை தவிர்க்கும் விதமாகவும், நீதியின் பால் நலன் கருதியும் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PON MELISA S

Uploaded on 14.11.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.11.14 17:30:59 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை

PON MELISA S

Uploaded on 14.11.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.11.14 17:31:04 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.3/2025 அதன்</u>**

**<u>அ.வ.எண்.95/2023</u>**

**சீரான / வரைவு – உத்தரவு**

14.11.2025